10-55 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இப்போதுதான் எனக்கு இந்தத் தகவல் கிடைத்தது. எனது அருகில் உட்கார்ந்திருக்கிற நமது சட்ட அமைச்சர் தொகுதி உடுமலைப்பேட்டையும் பெருத்த மழையினால் பாதிக்கப்பட்டது என்றும், அதற்கும் உதவுவதற்கு முதலமைச்சர் அவர்களிடம் நீங்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். முதலமைச்சரிடம் அந்த வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை ஏற்கெனவே அதிலே பணியாற்றிய நிலமற்ற தொழிலாளர்களுக்கும் வழங்கவேண்டுமென வற்புறுத்தி சர்வோதயத் தலைவர் உண்ணா நோன்பு இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பற்றியும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற உண்ணா நோன்பு பற்றியும் நான் சிறு எண்ணத்தை, கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வர இருக்கிறேன். ஏனென்றால் திருக்குவளையும், சுந்தரபெருமாள்கோயிலும், கும்பகோணமும் சேர்ந்து 3 முக்கிய இடங்களைப் பெறுகின்ற ஒரு சட்டமன்றமாகவும், அரசாகவும் இருக்கிறது. ஆளுகிற முதலமைச்சர் அவர்கள் திருக்குவளை என்றால் எதிர்க்கட்சித் தலைவர் ஆக இருப்பவர் கும்பகோணம். எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவராக இருக்கின்றவர் சுந்தரபெருமாள்கோயில்.

இந்தத் தஞ்சாவூரிலே வடபாதி மங்கலத்திலே சோழச்சிபுரத்திலே செயலிழந்துள்ள கரும்பு பண்ணையில், அரசுக்குச் சொந்தமான ஒரு கார்ப்பொரேஷனில் இருக்கிற அந்த நிலங்களை நிலமற்றவர்களுக்கு பகிர்ந்துக் கொடுக்கவேண்டும் என்பதற்காக உண்ணாநோன்பு இருக்கிறார் பூதான இயக்கத் தலைவர் ஜகன்னாதன் அவர்கள். அதிலே, பகிர்ந்துக்கொடுக்க வேண்டும், என்பதிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதை நேற்று விளக்கமான பதிலின் மூலம் இங்கே தெரிவித்தார்கள்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற திருக்குறளையும் படித்து அழகாகச் சொன்னார். எனவே, எவ்வளவு கொடுப்பது என்பதிலே தான் கொஞ்சம் வேறுபாடு, இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.

அவர்கள் உண்ணா நோன்பு இருப்பவர்கள் சார்பிலே சொல்லப்படுவது என்னவென்றால் ஏற்கெனவே ஒவ்வொருவருக்கும், அதாவது அதிலே வேலை பார்த்து வேலை இழந்தவர்கள்,

[திரு. குமரி அனந்தன்] [1990 சனவரி 20

அந்தப் பண்ணையிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த இப்போது வேலை இல்லாமல் இருக்கிற நிலமற்ற அந்த ஏழைகளுக்கு ஆளுக்கு 1 1/2 ஏக்கர் வீதம் கொடுப்பதாக முடிவு செய்து பாஸ் புத்தகங்களும் வழங்கப்பட்டுவிட்ட நிலையில் அதிலே சிறிது மாற்றம் ஏற்படுமானால் அதிலே அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுமே என்பது உண்ணா நோன்பு இருக்கின்றவர்களுடைய கருத்தாகத் தெரிகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்றவர்கள் சிலரும் நிலமற்றவர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கும் அதிலே கொடுக்க வேண்டும் அல்லவா என்கிற சிந்தனை உடையவர்களாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. எனவே இரண்டு பேரும் கொடுக்க வேண்டும் என்பதிலே கருத்தோடு இருக்கிற காரணத்தாலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், உண்ணா நோன்பு இருக்கிற அந்தத் தலைவர் வயது முதிர்ந்தவராக இருக்கிற காரணத்தாலேயும் நீண்ட நாள் சமுதாயச் சேவையிலே ஈடுபட்டு பூமிதான இயக்கத் தலைவராக இருக்கிற காரணத்தாலே பூமி பங்கீடு கொடுப்பதிலே அவர்கள் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற நிலை நமக்கெல்லாம் வேதனை தருகிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உண்ணா நோன்பு இருக்கிற அந்தத் தலைவரிடம் சில அதிகாரிகளை அனுப்பி அவர்களுடைய கோரிக்கையிலே இருக்கிற அந்த தன்மை என்ன'' அந்த கோரிக்கை என்ன என்பதையும், அரசு இப்போது அறிவித்திருப்பதிலே இருப்பது என்ன என்பதையும் எடுத்துச் சொல்லி எல்லோருக்கும் பாதகம் ஏற்படாத வகையில் அனைவரும் மகிழ்ச்சி அடைகிற வகையிலும் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வராத நிலையிலேயும் ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு உதவ வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, இதனை வேண்டுதலாக தாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிவாரண உதவிக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே ஊருக்குள் தண்ணீர் அதிகமாக வந்த காரணத்தால் மின்சார கம்பங்கள் எல்லாம் விழுந்து விட்டன. லைட் கிடையாது. நம்முடைய உணவுத்துறை அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் ஏற்கனவே சட்டப் பேரவைத் தலைவராக இருந்து ஆட்சி செலுத்தியவர். ஒரு செய்தி முடிந்து அடுத்த அலுவலுக்குப் போன பிறகு இடைச் செருகலாக இந்தச் செய்தியைப் புகுத்துவது பொருத்தம் ஆகுமா என்று சிந்திக்க வேண்டும். விடைகள் எல்லாம் சொல்லப்பட்ட பிறகு அறையில் உங்களுக்கு நிறையப் பேச வாய்ப்பு இருக்கிறது. திரு. எஸ். ஆர். இராதா.

1990 சனவரி 20]

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கரும்பு பண்ணை கழகத்தினுடைய நிலங்களைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு அது ஒரு பிரச்சினையாக உருவாகிவிட்டது என்று சொன்னாலும், அந்தப் பிரச்சினையை கவனத்தோடு தீர்க்க வேண்டும் என்பதில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், நிச்சயமாக அதிலே அக்கறை காட்டுவார் என்பதில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அந்தப் பண்ணைக்குச் சொந்தமான நிலங்கள் பல ஆயிரம் ஏக்கர் என்றாலும் கூட இன்றைக்கு உரிமை கொண்டாடுகிறவர்கள், அதாவது அதிலே சம்பந்தப்பட்டவர்கள் உரிமை கொண்டாடவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

11–00 மணி

அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேதான் சில பேருக்குச் சம்பந்தம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கப்படுகிறதோ என்ற சந்தேகம் இன்றைக்கு எழுப்பப்பட்டு, அது இன்றைக்கு ஒரு குழப்பமான நிலைமையை உருவாக்கி, அதனால் இன்றைக்கு பூதான இயக்கத்தினுடைய தலைவராக இருக்கின்ற ஜகன்னாதன் அவர்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டு, அந்த உண்ணா நோன்பினாலே அவர் பாதிக்கப்பட்டுவிடுவாரோ என்ற அச்சம் தஞ்சை மாவட்டத்திலே எழுந்து இருக்கின்ற அந்த நிலைமையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகக் கவனித்து இந்தப் பிரச்சனையை அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில், அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திலே பணியாற்றிய ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வேறு எந்த காரணத்தினாலேயும் அதில் தவறுகள் நடக்காத அளவிற்கு அவர் இதிலே நேரடியாக கொஞ்சம் கவனம் செலுத்துவாரேயானால் இந்தப் பிரச்சனைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டுவிடும். அவர் கவனம் செலுத்தி அங்கே உண்ணா நோன்பு இருக்கின்ற அந்தத் தலைவரையும் காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பையும் அவர் மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக நான் கிளப்பி முதலமைச்சர் அவர்களும் ஒரு விரிவான பதில் அளித்து, அதற்குப் பிறகும் மாவட்ட ஆட்சித் தலைவரை அனுப்பி அங்கே பேசச் சொல்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். உண்ணாவிரதம் தொடர்பாக இன்றைக்கும் செய்தி வந்திருக்கிறது. சர்வோதய தலைவர் ஜகன்னாதன் அவர்களைப் பொறுத்தமட்டில், அவருடைய உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. முதலமைச்சர் அவர்கள் அதை முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நானும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆனால்

பிரச்சனைகளைப் பொறுத்தமட்டில் சர்வோதைய இயக்கம் கிளப்பி இருப்பது சரியானதுதானா என்பது விவாதத்திற்குரிய ஒரு 'பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் நீண்ட நெடுங் காலமாக அந்தப் பிரச்சினை விவாதத்திலேயிருந்து, சில கோடி ரூபாய்க்கு அந்தக் கார்ப்பரேஷனுக்கு நஷ்டம் ஏற்பட்டு, அப் போது ஆட்சியில் இருந்தவர்களிடம் அதைக் கலைத்து நிலம் அற்றவர்களுககுக் கொடுங்கள் என்று கேட்டபோது அவர்கள் கலைக்க முடியாது, நஷ்டம் ஏற்பட்டாலும் அரசாங்கமே அதை ஏற்றுக்கொள்ளும் என்று ஏற்றுக்கொண்டு ஏறத்தாழ சில கோடிகள் அரசாங்கத்தினுடைய பணம் நஷ்டம் ஏற்பட்ட தற்குப் பிறகு அது இப்போது கலைக்கப்பட்டு விநியோகிக்கப் படும்பொழுது 10,000 ரூபாய் ஏக்கர் என்று முன்னாலே ஆளுநர் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டு இப்போது உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 3,200 ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அறிவிக் கப்பட்டு மற்ற எல்லா ஏற்பாடுகளும் முடிந்து முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஜனவரி 5-ந் தேதி என்று அந்த முழு விவரங்களும் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு உண்ணா விரதம் என்று அறிவிக்கப்பட்டதிலே இருக்கக்கூடிய நோக்கத் தைப்பற்றி நான் இப்போது பேச விரும்பவில்லை. அது தேவை யும் இல்லை. ஆனால் நாங்கள் நம்புவது அந்தந்த வருவாய் கிராமங்களில் இருக்கக்கூடிய நிலம் அற்ற ஏழைகளுக்கு எந்த ஜாதியில் இருந்தாலும், கட்சியில் இருந்தாலும் அதைப் பாராமல், அந்த ஊரில் இருக்கக்கூடிய விவசாயத் தோழர்களுக்கு இந்த நிலம் கிடைப்பதற்கு யாராக இருந்தாலும் தடையாக இருக்கக் கூடாது, அதற்கு இந்த அரசும் துணை போகக்கூடாது என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்த நேரத்திலே கூறி ஜகன்னாதன் அவர்களுடைய உண்ணாவிரதத்தை முடித்து வைப் பதற்கான ஏற்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து நேற்றைய தினம் மிக விளக்கமாக இந்த அவையிலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உச்சவரம்பு சட்டத்தில் ஒரு மாற்றம் கொண்டுவந்து ஏற்கனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கியபோது விதிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங் களையும் உச்சவரம்பிலே சேர்த்து, அப்படி சேர்க்கப்பட்ட நிலங்களிலே ஒன்றுதான் வடபாதிமங்கலத்திலே இப்போது பிரச்சினைக்குரிய இந்தப் பகுதி. அது கரும்பு நிலம் என்கின்ற பெயரால் உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டி ருந்தது. 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம் கொண்டு வந்த போது அதை நாம் கையகப்படுத்தினோம். கையகப்படுத்தி அங்கே ஒரு கரும்புப் பண்ணையைத் தொடர்ந்து நடத்தலாம் என்ற வகையிலேதான் அந்தக் கரும்புப் பண்ணை அங்கே நடைபெற்றது. ஆனால் அதிலே ஏற்பட்ட இழப்பின் காரண

1990 சனவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

மாக அந்தக் கரும்புப் பண்ணையைக் கடந்த காலத்தில் நடைபெற்ற ஆட்சியில் நிறுத்திக்கொள்ள வேண்டிய ஒரு சூழல் உருவாயிற்று.

அதன் பின்னர் அங்கு இருக்கின்ற அந்த நிலத்தை எல்லாம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தரவேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கை அந்த வட்டாரத்திலே வைக்கப்பட்டது. கவர்னர் ஆட்சிக் காலத்தில் அந்தக் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து ஏக்கரா ஒன்று 10 ஆயிரம் ரூபாய் வீதம் வாங்கிகொள்பவர்களுக்கு தரப்படும், அவர்கள் அந்தப் பகுதியில் வாழ்கின்ற நிலமற்ற விவசாயிகளாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு விலையும் நிர்ணயிக்கப்பட்டது.

11–05 மணி

இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, சில மாதங்களுக்கு முன்பு பகிரங்கமாக அறிவித்து 10,000 ரூபாய் ஏக்கராவுக்கு யாரும் தரத் தேவையில்லை. 3,600 ரூபாய் ஏக்கரா விலை என்ற அளவிலே தந்தால் போதும், அங்குள்ள அந்த நிலங்கள் ஏழை எளிய நிலமற்ற விவசாயிகளுக்குத்தான் வழங்கப்படும் என்று அறுதியிட்டுக் கூறப்பட்டது. நான் இன்னும் சொல்ல வேண்டுமேயானால், கட்சி சார்பற்ற முறையில் இதிலே ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குத் தரவேண்டும்; எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் தரக்கூடாது அல்லது வேறு கட்சிகளுக்கு இடம் அளிக்கக்கூடாது என்ற நிலையே இல்லாமல் ஒரு அரசு அதிகாரி போய் அதை ஆராய்ந்து அவர் என்ன கருத்து வெளியிடுகிறாரோ அந்தக் கருத்தின் அடிப்படையிலே இந்த நிலங்களைப் பங்கிடவேண்டும் என்று கூறப்பட்டு, அவ்வாறு ஆய்வு நடைபெற்றது.

அதனுடைய விவரங்கள் வந்த பிறகு 10,000 பேர் அதற்கு மனுச் செய்திருந்தார்கள். அந்த 10,000 பேரில் தகுதி படைத்தவர்கள் யார் அதாவது யார் எலிஜிபிள் என்று பார்த்த நேரத்தில் நாலாயிரத்து சொச்சம் பேர். இருக்கிற நிலம் மூவாயிரத்து சொச்சம் ஏக்கர். இதிலே ஒரு ஏக்கராவோ, $1\frac{1}{2}$ ஏக்கராவோ தர இயலாது. கடந்த காலத்திலே யாராவது அப்படி வாங்கித் தருவதாகச் சொல்லி ஏதாவது நடந்திருக்கக்கூடும். என்ன நடந்தது என்பதை எல்லாம் நான் இங்கே சொல்லவிரும்பவில்லை. அப்படி யாராவது உறுதியளித்து இருக்கக்கூடும். நாலாயிரத்து சொச்சம் பேருக்கு மூவாயிரத்து சொச்சம் ஏக்கராவை அளிக்கும்போது ஆளுக்கு $1\frac{1}{2}$ ஏக்கர் கொடு என்று சொன்னால் இப்போது இந்தப் பிரச்சினைக்காக வாதாடிய எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரோ அல்லது வேறு யாருமோ எனக்கு அப்படிப்பட்ட அறிவுரையைக் கூறமாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

ஏனென்றால் இருப்பது மூவாயிரத்து சொச்சம் ஏக்கரா. அதற்கு உரியவர்கள், உரிமை படைத்தவர்கள் என்ற அளவிலே தகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பவர்கள் இவ்வளவு பேர். பட்டியல் வைக்கப்பட இருக்கிறது. இது 5 ஆம் தேதியே சொல்லப்பட்டாகிவிட்டது. நம்முடைய நண்பர் வீரையன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல சனவரி 5ஆம் தேதியே எல்லாப் பத்திரிகைகளிலும், பெரிய எழுத்துக்களில், கொட்டை எழுத்துச் செய்திகளாக இந்தச் செய்தி வெளியிடப் பட்டு அரசின் சார்பில் அந்த அறிக்கை தரப்பட்டிருக்கின்றது.

வட்டாட்சி அலுவலகங்களிலே பட்டியல் வைக்கப்படும். அந்தப்பட்டியலின்படி நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்த பிறகு அந்தப் பட்டியலைப் பார்த்து அதில் இன்னின்னார் தகுதியற்றவர்கள் என்று சொன்னால் திருத்திக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது. அதைவிட ஒரு அரசு என்ன செய்ய முடியும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் தான் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தப் பண்ணையிலே வேலை செய்தவர்களுக்குத் தரவேண்டும் என்று சொன்னால், பண்ணையிலே வேலை செய்தவர்கள் நிலமுள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்கும் தரவேண்டும் என்று சொன்னால் நான் அதைச் சிந்திக்கத் தயாராக இருக்கிறேன். நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தான் தரவேண்மென்று அந்த இலக்கணத்தை மாற்றிவிட்டு பண்ணையிலே வேலை செய்தவர்களுக்கு, நிலமிருந்தாலும் கூட தரலாம் என்று சொன்னால் அதை நியாயமாக யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவேதான் நேற்றைக்கு நான் விளக்கம் அளித்திருக்கிறேன். இப்போதும் அந்த விளக்கத்தைத் தருகின்றேன். ஏற்கெனவே நிர்ணயித்த 10,000 ரூபாய் அல்ல. ஏக்கருக்கு 3,600 ரூபாய். 3,600 ரூபாய் தஞ்சாவூரிலே என்ன விலை என்பது நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

முக்கால் ஏக்கரா என்பது ஏறத்தாழ இரண்டு 'மா' வுக்கு மேல். அங்கே எல்லாம் 'மா' என்று சொன்னால்தான் புரியும். 100 குழி ஒரு 'மா' என்றால் 20 'மா' ஒரு 'வேலி'. ஒரு குழி இப்போது 40 ரூபாய், 50 ரூபாய் அங்கே விற்றுக்கொண்டிருக்கின்றது. அவருடைய பண்ணையிலே இன்னும் அதிகமாகக் கூட அந்த விலை இருந்தாலும் இருக்கலாம். 40 ரூபாய், 50 ரூபாய் ஒரு குழி விற்கிறது. 3,600 ரூபாய் என்பது எவ்வளவு சலுகை விலை என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வளவும் ஒரு அரசு முன் வந்து செய்யும்போது, அதிலே தவறு இருந்தால், வெளியிடப்படுகின்ற பட்டியலில் தகுதியுள்ளவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ள, அதற்குத் தலைவணங்க இந்த அரசு

1990 சனவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

தயாராக இருக்கிறது. அது ஜகந்நாதனாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள் அதை எடுத்துச் சொன்னால் திருத்திக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைத் தான் நான் நேற்றைக்கும் அறிவித்தேன். இன்றைக்கும் அதைத்தான் அறிவிக்கின்றேன். நேற்றே இங்கு அறிவித்ததைப்போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள இன்றைய தினம் ஜகந்நாதனைச் சந்திக்கச் சென்று இருக்கிறார்கள். காலையிலேகூட தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன்.

அவர்கள் இன்றைக்கு அவரிடத்திலே சென்று இந்த விளக்கங்களைத் தர இருக்கிறார்கள். அங்குள்ள வேறு சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களும்கூட இந்த விளக்கங்களை நண்பர் ஜகந்நாதனுக்குத் தருவதற்காகச் சென்று இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். எனவே, நல்லபடியாக அது முடியும் என்று நான் நம்புகிறேன. உரியவர்களுக்குப் போகாமல் ஏதோ குழப்பம் நடைபெறுவதாக எதிர்கட்சித் தலைவர் இங்கே எடுத்துச் சொன்னார். அப்படி ஒன்றும் இல்லை. யாரோ ஒரு காலத்திலே உரியவர்களாக இருந்தார்கள். அது இப்போது உரியவர்களுக்குப் போகின்ற காலம்தான் ஏற்பட்டு இருக்கின்றது. அப்படிப் போகும்போது ஏதாவது தவறு இருக்குமேயானால் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்பதைக் கூறி நான் உங்கள் அத்தனை பேருடைய சார்பாகவும், வயதான நண்பர், முதியவர் ஜகந்நாதன் அவர்கள் தன்னுடைய உண்ணாநோன்பினைக் கைவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது குறித்தும், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்தும்.

11-10 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலுக்குச் சென்றவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அந்தச் செய்தியைச் சொல்வதாகவும் அதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் கேட்டார்கள். ஆனால் இப்போது அதை விட்டுவிட்டு வேறு கருத்துக்குச் செல்கின்ற காரணத்தால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியவனாக ஆகிவிடுவேன், பிறகு விவாத மேடையாக ஆகிவிடும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS